# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2095/21 - 2018 නොවැම්බර් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.11.01

*2095/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2018, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற 3 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விதிக்கப்பட்டு 2018.06.14 ஆந் திகதிய 2075/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எச். எஸ். தலைப்பு இல. 0713.31.29 மற்றும் 2018.05.09 ஆந் திகதிய 2070/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எச். எஸ். தலைப்பு இல. 0713.40.11, 0713.40.12, 0713.40.21 மற்றும் 0713.40.22 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பருப்பு மற்றும் 2018.09.07 ஆந் திகதிய 2087/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எச். எஸ். தலைப்பு இல. 0713.20.10, 0713.20.20 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள சிக் கடலை சம்பந்தமாக வெளியிடப்பட்ட உத்தரவு 2018, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,<br>
நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர்.

நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு,<br>
கொழும்பு 01,<br>
2018, நவெம்பர் 01.

1A-PG 4300 — 532 (2018/11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 07.13 | 0713.20.10 | சிக் கடலைகள் (கார்பான் சோகன்) - முழுமையானவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 2.00 |
| | | 0713.20.20 | சிக் கடலைகள் (கார்பான் சோகன்) - பிளக்கப்பட்டவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 5.00 |
| 2. | | 0713.31.29 | பிற - உழுந்து | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 125.00 |
| 3. | | 0713.40.11 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புகள்) - முழுமையானவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 2.00 |
| | | 0713.40.12 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புகள்) - பிளக்கப்பட்டவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 7.00 |
| | | 0713.40.21 | மஞ்சள் பருப்புகள் - முழுமையானவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 2.00 |
| | | 0713.40.22 | மஞ்சள் பருப்புகள் - பிளக்கப்பட்டவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 7.00 |
| 4. | 17.01 | | கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்கோறோஸ்) வெல்லமும் திண்மையான உருவில் | |
| | | | பதனிடப்படாத சீனி, மேலதிக மணமூட்டப்படாதவையும், நிறமூட்டப்படாதவையும் | |
| | | 1701.12 | பீற் சீனி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00 |
| | | 1701.13 | கரும்பு வெல்லம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00 |
| | | 1701.14 | பிற கரும்பு வெல்லம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00 |
| | | | பிற | |
| | | 1701.91 | மேலதிக மணமூட்டப்பட்டவை அல்லது நிறமூட்டப்பட்டவை | |
| | | 1701.91.10 | சீனி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00 |
| | | 1701.91.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00 |
| | | 1701.99 | பிற | |
| | | 1701.99.10 | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு சீனி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 32.00 |
| | | 1701.99.20 | வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 32.00 |
| | | 1701.99.30 | பிற சீனி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00 |
| | | 1701.99.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00 |

11-727

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.